

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டுத் திடல் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் புனரமைத்து மேம்படுத்தப்பட்ட மீன் அங்காடியினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.09.2024), தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டு மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (20.09.2024) திருவண்ணாமலை மாநகராட்சியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தினை நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திருவண்ணாமலை – காந்தி நகர் பைபாஸ் சாலையில் கட்டப்பட்டு வரும்

# புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

திருவண்ணாமலை, செப்.22-

திருவண்ணாமலை பகுதியில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு மேற்கொண்டார்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (20.9.2024) திருவாண்ணாமலை மாநகராட்சி காந்தி நகர் பைபாஸ் சாலையில் கட்டடப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகள் மற்றும் பேருந்து நிலையத்தில் எதிரே அமைந்துள்ள இடங்கள் நில கையகப்படுத்தப்பட்டு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு சட்டப்போவை துணைத்தலைவர் பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கா பாண் டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறப்பினர் சி.என்.அண்ணாதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது :-

திருவண்ணாமலை ஆன்மீக தலமாக சிறந்து விளங்குவதால் இங்கு வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே இருக்கிறது. மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும் மாவட்ட மக்களின் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய பேருந்து நிலையத்தை திருவண்ணாமலையில் கட்டுவதற்கு ஆணையிட்டதன் அடிப்படையில் அரசின் சார்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது கட்டுமானப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும், தற்போது கட்டடப்பட்டு வரும் பேருந்து நிலையத்தில் கூடுதலாக பேருந்துகளை நிறுத்துவதற்கு கூடுதல் இடவசதியை ஏற்படுத்தும் பொருட்டு, இப்பகுதியை ஒட்டியுள்ள அரசுக்கு சொந்தமான ஏறத்தாழ 4 ஏக்கர் நிலப்பரப்பில் பேருந்து நிலைய கட்டுமான பணிகளை விரிவாக்கம் செய்யும் பணிகளுக்காக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க தற்பொழுது கூடுதலாக ரூபாய் 15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகளும் விரைவில் நடைபெறவுள்ளது.

மேலும் முதற்கட்ட பணிகள் விரைவில் முடித்து போடுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட உள்ளது. விரிவாக்கப்பணிகளும் கூடுதலாக 6 மாத காலம் வரை தொடர்ந்து நடைபெறும். மேலும் விரிவாக்கம் பணிகள் நடைபெற்ற பிறகு, ஏறத்தாழ 100 பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் நிறுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. பேருந்து நிலையத்தினை விரைவாகவும் தரமாகவும் கட்டி முடிப்பதற்கு மாநகராட்சியை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது போன்றுதிருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் தேவைகளுக்கேற்ப பல்வேறு திட்டப்பணிகளை உடனுக்குடன் நிறைவேற்றி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

தொடர்ந்து, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மேலத்திக்கான் ஏரியில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது, நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் கே.ஜி.சத்திய பிரகாஷ், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி மந்தாகினி, திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் காந்திராஜ், வட்டாட்சியர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தென்றல் செல்வராஜ் தலைமை! கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன்-இரா.நவநீதகிருஷ்ணன்-எஸ்.கௌதம் முன்னிலை!

# கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு!

## தென்றல் மணிமாறன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – தளபதி முருகேசன் வழங்கினார்!

கோவை, செப். 22-

திராவிட மாடல் நாயகன், தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோருக்கும் வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கும் வகையில் வீட்டுவசதி, நகர்ப்புற மேம்பாட்டு, மதுவிலக்கு மற்றம் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமியின் ஆணைக்கிணங்க அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைபடி ஈரோடு பாராளுமன்ற உறுப்பினரும் கழக இளைஞர் அணி துணை செயலாளருமான கே. இ.பிரகாஷ், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வர சாமி ஆகியோர் அறிவுறுத்தலின்படி கோவை தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் பொள்ளாச்சி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நேற்று முன்தினம் (20.09.2024) காலை 11 மணியளவில் பொதுமக்களுக்கு அன்னதான நிகழ்ச்சி மாவட்டக் இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார்.

கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன், நகர செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன், நகராட்சி துணை தலைவர் எஸ்.கௌதமன் ஆகியோர் முன்னிலையில் முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை வரவேற்புரையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் பனப்பட்டி தினகரன், கழக தீர்மான குழு உறுப்பினர் ஜீ.ஏ.அதிபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.அமுதபாரதி, மாவட்ட துணை செயலாளர் செ. கனிமொழி, பொள்ளாச்சி வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் அய்யம்பாளையம் ராசு, ஆனைமலை வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.எஸ்.யுவராஜ், மதுக்கரை ஒன்றிய செயலாளர் விஜயசேகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், சூளேஸ்வரன் பட்டி பேரூர் கழக செயலாளர் ஆறுச்சாமி, நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ. செந்தில்குமார், மாணிக்கராஜ், வைஷ்ணவி, மணிமாலா, இலக்கிய அணி குரும்பை ராதாகிருஷ்ணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சுரேஷ்குமார், மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் அவினேஷ் கார்த்திக், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் சத்திய தேவ், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் நடராஜ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் எம்.வி.ஜெயக்குமார், பொள்ளாச்சி வடக்கு மத்திய ஒன்றிய பொருளாளர் நாகராஜ், மு.மாவட்ட பிரதிநிதி கமலக்கண்ணன், வட்ட செயலாளர்கள் சி.எஸ்.கருப்பையா, பாலசுப்பிரமணியம், பா.தர்மலிங்கம், போஜராஜன், பூவை செல்வராஜ், தா.ஜெகதீசன், ஜி. சதீஸ்குமார், சபாபதி, வடக்கிபாளையம் ஊராட்சி கிளை செயலாளர் சிவக்குமார், 1வார்டு பழனிசாமி, புளியம்பட்டி பாபா முருகேசன், நகர பொறியாளர் அணி அமைப்பாளர் ச.சரவணன், மகளிர் அணி மகாலட்சுமி, ஆனைமலை மனோஜ், நகர தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ் பிரபு, பேங்க் விஜயன் , ஆறுபடை வீடு முருக பத்தகர்கள் மார்கெட் ரவி, வடுகபாளையம் கந்தவடிவேல், கோலார்பட்டி செந்தில், ஜோதிநார் நந்தகுமார், மாக்கினாம்பட்டி சிவக்குமார், கோவில்பாளையம் மீனாட்சி சுந்தரம், செங்கல் மணி, ஜெ.சதீஸ், எம். ஆர்.மோகன், பிரவீன் குமார், சபரி துரை, கண்ணன், பிரசாத், கோட்டாம்பட்டி நவீன், தாஸ் பிரபு, தினேஷ், த.விக்னேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 20 / 09 / 2024 அன்று புதுக்கோட்டை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வாராப்பூர் ஊராட்சியில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி பெருங்களூர் ஊராட்சியில் நூலக கட்டிடம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பின்னர் பெருங்களூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மற்றும் கலையரங்கம் ஆகிய முடிக்கப்பட்ட பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காக புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கறம்பக்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் தவ.பாஞ்சாலன். ஊராட்சி மன்ற தலைவர் .பிரேமா ரெத்தினம், துணைத் தலைவர், சிவபெருமாள் ராமலிங்கம் ரெங்கசாமி, இளங்கோவன், கனகராஜ், பாலு, நவீன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.